## கொழும்பு பெரும்பாக நகர அபிவிருத்திச் செயற்திட்டம் - 2017

கொழும்பு பெரும்பாக நகர அபிவிருத்திச் செயற்திட்டத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கிக்கும் (ஐபீஆர்டி) இடையே கைச்சாத்திடப்பட்ட 2012 மே 18 ஆந் திகதிய 8145-எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் பட்டோலை 2 இன் II (பீ.3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் நகர அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் மற்றும் கொழும்பு மாநகர சபை என்பன செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாகவும் உள்ளன. கொழும்பு நீர்வடிநில வடிகால்களில் வெள்ளம் ஏற்படுவதனைக் குறைத்தல், தெரிவுசெய்யப்பட்ட உள்ளூர் உட்கட்டமைப்பு வசதிகளையும் சேவைகளையும் புனரமைத்தல், மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தல் என்பவற்றிற்காக கொழும்பு தலைநகர் பிரதேசத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளின் இயலுமையினை வலுப்படுத்தல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 42,031.74 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 321 மில்லியனானதுடன் இதில் ரூபா 27,890.22 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 213 மில்லியன் மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியினால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2012 யூலை 10 ஆந் திகதி தொடங்கியிருந்ததுடன் 2017 யூன் 30 ஆந் திகதியளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. பின்னர், செயற்திட்டத்தின் காலப்பகுதி 2020 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்தவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி

செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(உ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்தவங்களுக்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஊ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2017 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | 2017 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2017 ஆம் ஆண்டின் போது | | 2017 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா.மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஐபீஆர்டி | 213 | 27,890.22 | 3,000 | 14.34 | 2,437 | 87.70 | 12,198 |
| இலங்கை அரசாங்கம் | 108 | 14,141.52 | 1,177 | 7.59 | 1,177 | 25.70 | 3,691 |
| மொத்தம் | **321** | **42,031.74** | **4,177** | **21.93** | **3,524** | **113.40** | **15,889** |

மேற்குறிப்பிட்ட தகவல்களின் பிரகாரம், கடனளிக்கும் முகவர்களால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 27,890.22 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 213 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் 41 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 12,198 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 87.70 மில்லியன் தொகையொன்று மாத்திரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்ட காலப்பகுதியின் போது 5 1/2 வருடங்கள் கடந்த பின்னர் பயன்படுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டத்தினால் விபரமான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படாமையால், மிகுதியாகவுள்ள 3 1/2 வருட செயற்திட்டக் காலப்பகுகுதியின் போது ரூபா 15,692.22 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 125.3 மில்லியன் ஒதுக்கீட்டின் மீதியை பயன்படுத்தும் சாத்தியத்தன்மை சந்தேகத்திற்கிடமாகக் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

### 3.2 பௌதீகச் செயன்முன்னேற்றம்

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், வெள்ள மற்றும் கழிவகற்றல் முகாமைத்துவம் மற்றும் மாநாகர கொழும்பு பிரதேசத்தில் உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கு ஆதரவழித்தலின் கீழ் 56 நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு செயற்திட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக, ரூபா 13,843 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 44 ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் 34 ஒப்பந்தங்களுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதியளவில் மேலும் 03 வருடங்கள் செயற்திட்டங்கள் காலப்பகுதியின் தாமதத்திற்கு பின்னர் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. மீதமாகவுள்ள 10 நிர்மாண ஒப்பந்தங்களின் பௌதீக செயன்முன்னேற்றமானது மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு 10 சதவீதத்திலிருந்து 87 சதவீத வீச்சிலிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கின்சி வீதியின் வடிகாலமைப்பு முறைமையின் மீள்நிர்மாணம், தேவி பாலிக வித்தியாலயத்தின் வடிகாலமைப்பு கால்வாயின் நிர்மாணம், மாடிவெல கிழக்கு மற்றும் கொலனாவ நகர சபைப் பிரதேசத்தின் அபிவிருத்தி வேலைகள் போன்றன தொடர்பாக பயன்பாட்டு சேவைகளை மாற்றுவதிலுள்ள காலதாமதங்கள் மற்றும் ஒப்பந்தகாரர்களின் தவறுகள் போன்றவற்றால் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 13 சதவீதத்திலிருந்து 90 சதவீத வீச்சில் மந்தமான செயன்முன்னேற்றத்தை அறிக்கையிட்டிருந்தது. அத்தகைய நிர்மாண வேலைகள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது.

(ஆ) வெள்ள மற்றும் கால்வாய் முகாமைத்துவ கூறின் கீழ் ரூபா 14,377 மில்லியன் கிரயத்தில் மீளாய்வாண்டின் இறுதியளவில் பூர்த்தியாக்குவதற்கு அம்பத்தல மற்றும்

சென் செபஸ்ரியன் தெற்கு குழாயிடல் நிலையங்கள், கொலன்னாவவிலுள்ள கால்வாய திசைதிருப்பல் மற்றும். பிளஸ்சிங் வாயிற்கதவு, வெய்ரா ஏரியிலுள்ள லீனியர் பூங்கா, சவுன்டர் பிளேஸ் இலுள்ள வெப்ப நீர் வடிகாலமைப்பு போன்றவற்றின் நிர்மாண வேலைகள் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட நோரிஸ் கால்வாய்கள் புனரமைப்பு வேலைகள் பிரயோகத்திலுள்ள காலதாமதங்கள் மற்றும் அமுலாக்கல் முகவர்களிற்கிடையே முறையான ஒருங்கிணைப்பு இன்மையால் 2017 திசெம்பர் 31 இலும் தொடங்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மதிவெல கிழக்கு திறைமாற்றி (கட்டம் I) நிர்மாணங்கள் மீதான ஒப்பந்தத்தின் கீழான புதிய இறக்கல் கட்டமைப்பு மற்றும் வெள்ளத் தடைவேலி போன்றவற்றின் நிர்மாண வேலைகளானது 2017 நவம்பர் அளவிலும் பூர்த்தியாக்கப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்த போதிலும் 2018 யூன் 30 வரையிலும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

--------------------------------

பொதுவான நடைமுறையாக, ஆலோசனையாளர்களால் தயாரிக்கப்பட்ட வடிவமைப்புக்கள் சரியற்றிருத்தல், வேலை நோக்கெல்லை மற்றும் வடிவமைப்புக்களின் வழமையான மாற்றங்கள் மற்றும் முறையற்ற மதிப்பீடுகளினை தயாரித்தல், ஏனையவை போன்ற ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள் செயற்திட்ட நோக்கங்களை அடைதல் மீதான மெதுவான செயன்முன்னேற்றத்திற்காக நேரடியாக செல்வாக்கு செலுத்தியது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) மதிவெல கிழக்கு திசை திருப்பல் திட்டம் - கட்டம் II இன் கீழான முன்னேற்ற வேலைகளானது பெறுகைச் செய்முறையை பிரயோகிப்பது தொடர்பாக ஏற்பட்ட காலதாமதங்களால் மெதுவான, செயன்முன்னேற்றத்தை காட்டியது. ஆகையால், முன்னேற்ற வேலைகளானது 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 மாதங்களிற்கு மேலாக இலக்கிற்கு பின்னிலிருந்ததுடன் ஆரம்பத்தில் மதிப்பிடப்பட்ட ரூபா 100 மில்லியன் தொகையான ஒப்பந்தக் கிரயம் முறையான காரணங்களில்லாமல் ரூபா 125 மில்லியன் வரை அதிகரித்திருந்தது.

(ஆ) மேற்கொள்ளப்பட்ட மர வேலைகளிற்காக தளபாட நடைமுறைச் சான்றிதழ்களின் சமர்ப்பித்தல், தோட்டத்தைப் பராமரிப்பதற்காக கையடுகளைத் தயாரித்தல், வம்பு பிளாஸ்ரிக் உள்ளடக்க மற்றும் றென்சைல் துணி ஏனையவை போன்றவற்றிற்காக உத்தரவாதச் சான்றிதழ்களை சமர்ப்பித்தல் போன்றவற்றிற்காக ரூபா 202 மில்லியன் கிரயத்தில் வழங்கப்பட்ட வெயிரா ஏரி, கட்டம் I உடனான லீனியர் பூங்காவின் நிர்மாணத்திற்கான ஒப்பந்தத்தின் நோக்கெல்லையில் நிர்ணயிக்கப்பட்ட பல தேவைப்பாடுகளானது அதற்காக ரூபா 16.43 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தகாரர்களால் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(இ) விதப்புரைகளின் பிரகாரம், வெயரா லேக்கிலுள்ள லீனியர் பூங்காவிற்கு வருகின்ற சுற்றுலா பிரயாணிகளிற்கான இருக்கையானது மருதம் மற்றும் தேக்கு மரத்தினால் தளபாடங்களில் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. ஒதுக்கீடானது ரூபா 7.86 மில்லியன் தொகையாகும். எனினும், கணக்காய்வாளர்களால் தெரிவு செய்யப்பட்ட மாதிரிகள் தொடர்பாக சுயாதீனமான தரப்பினர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகூட பரீட்சைகளில் இணங்கியிருக்காததுடன் ஏனைய வகையான தளபாடத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தது என உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) தேவி பாலிகா வித்தியாலயத்திலுள்ள வடிகாலமைப்பு முறைமையின் நிர்மாணம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக அவதானிப்புக்களானது பிறிகாஸ்ட் கொங்கிறீட் விடயங்கள், ஒன்றுடனொன்று பிணைந்த தடுப்புக்கள் மற்றும் இரும்பு

வார்கள் தர தேவைப்பாடுகளுடன் இணங்கியிருக்கவில்லையென நிரூபிக்கப்பட்டது. தர உறுதிப்பாடு நோக்கங்கள் மற்றும் கொடுப்பனவுகளிற்காக எந்தவொரு பொறிமுறையும் இருந்ததுடன் ரூபா 52.62 மில்லியன் தொகையானது முன்னைய கொங்கிறீட்கள் போடுவதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(உ) முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டவாறு, சாத்தியமான வெள்ள இடர்கள் பிரதேசத்தின் வெள்ளை இடரை குறைக்கும் நோக்குடன் திட்டமிடப்பட்ட வெடன்கனவில் நுண் - பன்முகப்படுத்தல் பூங்காவின் நிர்மாண வேலைகளிற்கான சூழல் விளைவுகளை மதிப்பிடுவதற்காக எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், அதற்கான அளவிட்டு பட்டியல்கள் மற்றும் பொறியியலாளர் மதிப்பீடுகள் முறையான கற்கையை மேற்கொள்ளாமல் தயாரிக்கப்பட்டதுடன் மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் அளவீட்டை சரியாக கணிப்பிடாமையால் ஒப்பந்தகாரர்களுக்கு அதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 92 மில்லியன் மேலதிகக் கொடுப்பனவானது அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மட்டக்குளியவில் குறோ ஜலன்ட் பீச் பூங்காவினை நிர்மாணத்திற்கான ஒப்பந்தமானது 2014 செப்தெம்பர் 23 இல் ரூபா 275 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் வழங்கப்பட்டிருந்ததுடன், அது 2015 யூலை அளவில் பூர்த்தியாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எனினும், ஒப்பந்தகாரர்களின் தவறுகளினால் நிர்மாண நடவடிக்கைகளானது 2016 திசெம்பர் 31 இலேயே பூர்த்தியாக்கப்பட்டிருந்தது என வெளிப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது ரூபா 183 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்த உடன்படிக்கையின் அளவீட்டு பட்டியலில் உள்ளடக்கப்பட்ட 47 விடயங்கள் 2017 திசெம்பர் 31 வரையிலும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், ரூபா 5,106 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் செயற்திட்டத்தால் வழங்கப்பட்ட 19 ஒப்பந்தங்களின் கீழான வேலைகள் ரூபா 4,404 மில்லியன் கிரயத்தில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டதுடன் செயற்திட்டமானது அதற்கான பொருத்தமற்ற கிரய மதிப்பீடுகளை தயாரித்தது என சான்றளித்தது.

(ஏ) செயற்திட்டத்தால் வேலைக்கமர்த்தப்பட்ட உள்ளூர் ஆலோசனையாளர்களால் தயாரிக்கப்பட்ட முடிவடைந்த வேலை அறிக்கைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுச் செவ்வையில் பெரும்பாலான ஆலோசனையாளர்கள் உசாத்துணை விதிகளுக்கு முரணாக செயற்திட்ட நிர்மாண வேலைகளில் ஈடுபடுவதற்கு பதிலாக செயற்திட்டத்தின் நிர்வாக வேலைகளில் ஈடுபட்டிருந்தனர். 03 ஆலோசனையாளர்களின் சேவைக் காலப்பகுதிகளானது மேலும் 03 வருடங்களிற்காக 2017 ஆகஸ்ட் இலிருந்து செயற்திட்டத்தால் நீடிக்கப்பட்டிருந்ததுடன் அவர்களுடைய செயலாற்றல்களை மதிப்பிடாமல் வருடாந்த சம்பள அதிகரிப்பில் 10 சவீதத்தை வழங்கியிருந்தது.

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சிரேஷ்ட பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் போன்ற செயற்திட்டத்தின் முக்கிய பதவிகளின் 70 வெற்றிடங்கள் ஆண்டொன்றிற்கு மேலாக வெற்றிடமாகவிருந்ததுடன் இந்த நிலைமையானது செயற்திட்ட நடவடிக்கைகளின் சுமுகச் செயற்பாட்டினை பாதிக்கும் என அவதானிக்கப்பட்டது.

(ஆ) கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களின் கீழான நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்கு 18 பொறியியலாளர்களை உள்ளடக்கி காணி மீட்சி மற்றும்

அபிவிருத்திக் கூட்டுதுதாபனத்தின் 50 உத்தியோகத்தர்களை செயற்திட்டம் வேலைக்கமர்த்தியிருந்ததுடன் 2017 சனவரியிலிருந்து 2018 மே வரையான காலப்பகுதிக்காக ரூபா 32.6 மில்லியன் கூட்டுத்தொகையான ஊதியம் செலுத்தப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக, 02 ஆலோசனையாளர்கள் வேலைக்கமர்த்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 2.8 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும், கடமைப் பட்டியல்களானது அவர்களது செயலாற்றலை மதிப்பிடும் வகையில் வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 வழமைக்கு மாறான நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டமானது மோட்டார் வாகனம் மற்றும் மூலப்பொருள் போன்றவற்றின் முற்றத்திற்கு மட்டக்குளியவில் 260 பேர்ச்சஸ் காணித்துண்டொன்றை வாடகைக்கு எடுத்திருந்ததுடன் 2017 ஆகஸ்ட் இலிருந்து 2018 யூலை வரையான காலப்பகுதிக்காக ரூபா 12.1 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும், மட்டக்குளியவிலுள்ள புதிய முதவால் கால்வாயின் கீழான உரிய வேலைகள் 2018 யூலை 31 இலும் தொடங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்ட நோக்கங்களை அடைவதுடன் தொடர்புபடாத கருங்கல்லில் பெயரிடல் மற்றும் திறப்பு வழாவிற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 4.28 மில்லியன் தொகை ஏற்பட்டிருந்தது.

(இ) 05 மோட்டார் வாகனங்களை வாடகைக்கெடுப்பதற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 5.5 மில்லியன் தொகையை செயற்திட்டம் செலவழித்தது என அவதானிக்கப்பட்டது. இவ்வாகனமானது மாதமொன்றிற்கு 2000 கிலோமீற்றர் ஓடுவதற்கு வேண்டப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது மாதமொன்றிற்கு 549 கிலோமீற்றர்கள் மோட்டார் வாகனங்களின் சராசரி பயன்பாடாகவிருந்தது. மேலும், அத்தகைய வாகனங்களை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2016 மார்ச் 24 ஆந் திகதிய 01/2016 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு முரணாக 05 உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்தது.

## 3.6 நிதிசார் கட்டுப்பாடுகள் மீதான விடயங்கள்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,940 மில்லியன் கிரயத்தில் செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்களை பதிவு செய்வதற்கு செயற்திட்ட மதிப்பீடு ஆவணத்தின் பந்தி 42 இன் பிரகாரம் நிலையான சொத்து பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.